# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.
## S.C. NO. 131/2021

**05.12.2024. அ.சா. 6 பிச்சைக்காரன்**

**எதிரிகள் தரப்பில் குவிமுச. 311 மனு அனுமதிக்கப்பட்டு சாட்சி 6 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-**

A1 to A3 present.

என்னை இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை மங்களம் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். விசாரித்த தேதி, நேரம் ஞாபகம் இல்லை. எந்த போலிஸ் விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆஜர் எதிரிகள் ரமேஷை கொலை செய்ததை நான் நேரில் பார்க்கவில்லை . ஆஜர் எதிரிகள் என் தம்பியை அடித்து போட்டுவிட்டார்கள் என்று என் முதல் விசாரணையில் சொல்லியிருப்பதை நேரில் பார்த்தேனா என்றால் இல்லை. 2 ம் எதிரி 1ம்எதிரியுடன் எந்த ஒரு நாளிலும் கள்ளத்தொடர்பில் இருக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் இல்லாத தொடர்பை சொல்லி என் தம்பி யை அவர்கள் கொல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. போலிசார் ஒரு நாளும் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு நேரடியாக எந்த விஷயமும் தெரியாது என்றால் சரியல்ல. என் தம்பி ரவி மற்றும் சகோதரி மீனா ஆகியோர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath.,M.L.,**
Additional District Judge,
Tiruvannamalai.